**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – தஞ்சாவூர் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி – மூன்று வகுப்பறைகள் கட்டுதல் – தொடராச் செலவினத் தொகை ரூ.34.10 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 14**

**நாள்: 05.05.2017**
**ஹேவிளம்பி – சித்திரை, 22**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1 அரசாணை (நிலை) எண் 64, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14.10.2014.

2 அரசாணை (நிலை) எண் 46, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 07.09.2015.

3 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 400/சி.ப./2013, நாள் 05.08.2016.

------

**<u>ஆணை</u>:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தஞ்சாவூர், பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக (ஆண்கள்) தரம் உயர்த்தி, கூடுதலாக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கென தொடர் செலவினமாக ரூ.29,71,400/–க்கு ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தஞ்சாவூர் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆண்களுக்கான 11 ஆம் வகுப்பு மேல்நிலைப்பிரிவில் ஆண், பெண் என இருபாலரையும் சேர்த்துக் கொள்ள பள்ளியின் தலைமையாசிரியருக்கு அனுமதி வழங்கிய மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித் துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்ட மதிப்பீட்டின் படி, தஞ்சாவூர் பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, உணவுக்கூடம் மற்றும் கழிப்பறை ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளதால் இவற்றினை தவிர்த்து மூன்று வகுப்பறைகள் கட்டுவதற்கு மட்டும் 2016–2017ஆம் ஆண்டிற்கான விலை விகிதப்பட்டியலின் படி (Schedule of rates) ரூ.34.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று தஞ்சாவூர் பார்வையற்றோருக்கான உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதனைத் தொடர்ந்து, ரூ.34.10 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று வகுப்பறைகள் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

[த.பி.பா.]

5. மேற்படி கட்டுமானப் பணி நடைபெறும்போது, ஒவ்வொரு கட்டுமான நிலை குறித்த காலமுறை அறிக்கையினையம் (Periodical Report) மற்றும் பணி முடிவுற்ற பின்னர், பணி நிறைவு சான்றிதழினையும் (Work Completion Certificate) பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே, பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"4235–சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு–02 – சமூக நலன்–101 – ஊனமுற்றோர் நலன் – மாநிலச் செலவினங்கள்–JV அரசு பார்வையற்றோருக்கான துவக்கப் பள்ளிக்கு சொந்த கட்டடம் கட்டுதல் – 16 பெரும் பணிகள்".

[த.தொ.கு 4235–02–101–JV–1609]

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ–I) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimates 2017-2018) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்புகளை தகுந்த நேரத்தில் நிதி (வ.செ.பொ–I) துறைக்கு தவறாமல் அனுப்புமாறும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல்சாரா எண் 16670/நிதி (ச.ந.)/2017, நாள் 29.04.2017 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 410 (நானூற்று பத்து)–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
முதல்வர், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78 வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18/ பெயரில்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

[த.பி.பா.]

**<u>நகல்</u>:**
முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (சமூக நலம் மற்றும்
சத்துணவு திட்டம்) அலுவலகம், சென்னை–9.
நிதி (ச.ந.)த் துறை, சென்னை–9.
நிதி (வ.செ. பொ.I–II)த் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்